**<u>சுருக்கம்</u>**

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – “பார்வையற்ற வாசகர்களுக்கு நூலகத்தில் தனிப்பிரிவு தொடங்குதல்” – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை</u>**

**<u>அரசாணை (நிலை) எண்.158</u>** **<u>நாள் 27.07.2018</u>**

**<u>திருவள்ளுவராண்டு, 2049</u>**
**<u>விளம்பி வருடம், ஆடி–11</u>**

**<u>படிக்கப்பட்டவை:–</u>**

பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண்.5756/உ1/2018, நாள் 27.06.2018.

~*~~*~

**<u>ஆணை:–</u>**

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

“பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் நலனுக்காக கணினிகள் மூலமாக நவீன தொழில் நுட்பத்துடன் பேசும் கருவி, பேசும் புத்தகம், மென்பொருள், கற்றல் உபகரணம், தொடுதிரை, தொடுகை வரைபடம், சிறப்பு விசைப்பலகை மற்றும் ஒலிப்புத்தகம் பயன்படுத்தும் வசதிகள் கொண்ட தனிப்பிரிவு தமிழகமெங்கும் மாவட்ட மைய நூலகங்களில் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.96 இலட்சம் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.’’

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு பொது நூலகத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும், போட்டித் தேர்வு உட்பட பிற தேர்வுகளுக்கு இணைய வழியில் விண்ணப்பிக்க உதவும் சேவை வழங்கப்பட்டு வருகிறது என்றும், தன்னார்வளர்களின் உதவியுடன் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு பாடங்களை வாசித்தல் மற்றும் ஒலிப்பதிவு செய்து வழங்குதல் போன்ற தனித்துவமாக சேவைகளை வழங்கப்பட்டு வருகிறது என்றும், இதற்கான வரவேற்பினைக் கருத்தில் கொண்டு மாற்றுத்திறனாளிகளின்பால் அதிக ஈடுபாடு கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழக அரசின் அறிவிப்பின்படி தமிழகமெங்கும் செயல்படும் மாவட்ட மைய நூலகங்களில் பார்வையற்ற / பார்வை குறைபாடு உள்ளவர்களின் நலனுக்காக கணினிகள் மூலமாக நவீன தொழில்நுட்பத்துடன் பேசும் கருவிகள், மென்பொருள், கற்றல் உபகரணம், தொடுதிரை, தொடுகை வரைபடம், சிறப்பு விசைப்பலகை மற்றும் ஒலிப்புத்தகங்களை பயன்படுத்தும் வசதிகள் கொண்ட தனிப்பிரிவு அமைக்கலாம் என்றும், இப்பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் எல்காட் நிறுவனம் மற்றும் உரிய விதிமுறைகளின் தயாரிப்பு நிறுவனங்களின் மூலம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது என்றும், அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் பார்வையற்ற மற்றும் பார்வை குறைபாடு உள்ளவர்களின் நலனுக்காக

(த.பி.பா.)

தனிப்பிரிவு அமைப்பதற்கு தேவையான உபகரணங்களை ரூ.92,46,980/– (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டின் மானியக்கோரிக்கை அறிவிப்பான "பார்வையற்ற வாசகர்களுக்கு நூலகத்தில் தனிப்பிரிவு தொடங்குதல் " என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் நலனுக்காக கணினிகள் மூலமாக நவீன தொழில் நுட்பத்துடன் பேசும் கருவி, பேசும் புத்தகம், மென்பொருள், கற்றல் உபகரணம், தொடுதிரை, தொடுகை வரைபடம், சிறப்பு விசைப்பலகை மற்றும் ஒலிப்புத்தகம் பயன்படுத்தும் வசதிகள் கொண்ட தனிப்பிரிவு தமிழகமெங்கும் மாவட்ட மைய நூலகங்களில் ஏற்படுத்தவும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 2000–இல் உள்ள நடைமுறைகளை பின்பற்றி, அப்பிரிவு அமைப்பதற்குத் தேவையான உபகரணங்களை ரூ.92,46,980/– (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2502/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 12.07.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
27/7/18